01. வீடு என்றால் உங்களுக்கு என்ன அர்த்தம்? அது ஏன்?

நான் இப்போது சந்தோசமாகவும், நிம்மதியாகவும் இருப்பதற்கு ஒரு வீடு இருப்பது என்பது சந்தோசம். ஏனென்றால், நான் திருநங்கையாக மாறிய காலத்தில் வீடில்லாமல் பேருந்து நிலையங்களிலும், வீதிகளிலும், கோவில்களிலும் இருந்த காலம் மாறி, சாப்பாடு இல்லாவிட்டாலும், வாடகை வீடு என்டாலும் எனது கணவருடன் வாழ ரு வீடு இருக்கிறது என்ற சந்தோசத்துடன் வாழ்ந்து வருகின்றேன்.

02. எந்தப் பொருட்கள் அல்லது இடங்கள் நீங்கள் உங்களது வீட்டிலிருப்பதைப் போல இணைக்கின்றீர்கள்? ஏன்?

எனக்கு இப்ப பழைய நினைவுகள கொண்டு வாரது எதென்டா, என்னட்ட ஒரு குடும்பத்தோட எடுத்த பழைய புகைப்படம் ஒண்டு இருக்குது. அதப் பாக்கேக்க பழைய நினைவுகள் வந்து தீண்டிக்கொண்டு போகும். ஏனென்டா, என்ர அப்பம்மா, அத்தைமார், அக்கா, நான் எல்லோரும் பழைய வீட்டில் விளையாடிய இடங்கள், ஒன்றாக சாப்பிட்ட இடங்கள் எல்லாம் ஞாபகமாக வந்து வந்து போய்க்கொண்டிருக்கும்.

03. நீங்கள் என்ன விதமான உணர்ச்சிகளை வீட்டுடன் இணைத்துப் பார்க்கின்றீர்கள்? ஏன்?

நான் நினைக்கிறது…. என்ர அம்மா அப்பாவின்ர பாசம் கிடைக்கேல. ஆரம்பத்தில அநேகமாக அந்த பாசத்துக்காக ஏங்கியிருக்கிறன்…. தவிச்சிருக்கிறன்… ஆனா இப்ப எனக்கு கிடைச்ச Husband, அவங்கட அம்மா, அப்பா மூலமாக எனக்கு எல்லாப் பாசமும் கிடைக்குது என்ரத நான் நூற்றுக்குநூறு நினைச்சு சந்தோசப்படுறன்.